# இயல் - மூன்று

# சமயப் பொதுமை

# 3. சமயப் பொதுமை

இஸ்லாமிய மார்க்கம் என்பது உலகலாவிய சமயங்களில் தனித்தன்மை கொண்டதாகும். இது மதமன்று மார்க்கமே ஆகும். இஸ்லாமியன் மறுமையென்னும் மறுவாழ்க்கையினைத் தொடருவதற்கான பயிற்சியே இவ்வுலக வாழ்க்கை என இஸ்லாம் கூறுகிறது. இஸ்லாமியன் தனது வாழ்க்கையில் நன்மைகளை அதிகமாகக் கொண்டானாயின் அவன் இறந்ததற்குப் பின்பு இறைவனின் கேள்விக் கணக்கின் போது தனது நன்மையின் மூலம் அவன் சொர்க்கம் என்னும் மறுவுலகத்தினை அடைவான். அந்த வாழ்க்கையானது நிரந்தரமானதொரு நிலையினைக் கொண்டதாகும். அவ்வாழ்வின் போது தீமையினைச் செய்தாலும் அதற்குத் தண்டனையில்லை. ஏனெனில் தீமையும் நன்மையின்பால் விலகும் என்று இறைவன் கூறுகின்றான். ஏனெனில் அந்த நிரந்தர வாழ்வினைப் பெறவே இஸ்லாமியர்கள் இவ்வுலக வாழ்வினை ஒரு தேர்வாக மேற்கொள்ளுகின்றனர்.

### சமயம்

“சமயம் என்னும் சொல்லுக்குச் ‘சமைத்தல்’, ‘பக்குவப்படுத்துதல்’ என்று பொருளுரைப்பர். அதாவது இச்சமயங்கள் இவ்வுலகில் உள்ள மக்களின் மனங்களைச் சமைத்துப் பக்குவப்படுத்தி, நேரான பாதையில் செலுத்துகின்றன. அவற்றுள் இஸ்லாம் ஒன்று. இஸ்லாம் எனபதனை மதம் அல்ல மார்க்கம் என்பர். மார்க்கம் எனும் சொல் வழி, நெறி ஆகிய பெருள்களில் சுட்டப்படுகின்றன.”[1] இந்த வழி அல்லது நெறிமுறைகளைப் பின்பற்றி செல்வோர்க்கு ‘மறுமை’ என்னும் மறு உலகில் சொர்க்கம் என்னும் நல்லயிடத்தில் இறைவன் சிறந்ததொரு முடிவில்லா வாழ்வினை மனிதர்களுக்கு அளிப்பான் என்பது இஸ்லாமியர்களின் உறுதியான நோக்கமாக விளங்குகின்றது.

### மனித சமூகத்தின் மேம்பாடு

மனித சமூகத்தின் மேம்பாடாக இஸ்லாமிய மார்க்கமானது விளங்குகின்றது என்பதனை, “ஒவ்வொரு சமயமும் உலக வரலாற்றில் அந்தந்தக் காலங்களில் தோன்றிய இறைவனுடைய திருத்தூதர்களால் அறிமுகம் செய்யப்பட்டதோ அதுபோலவே இஸ்லாமிய மார்க்கமும் பல்வேறான காலங்களில் தோன்றிய இறைவனுடைய திருத்தூதர்களால் அறிமுகம் செய்யப்பட்டது.”[2]

இவ்வாறு தோன்றிய இஸ்லாமிய மார்க்கமானது மனிதர்களின் மேம்பாட்டினை மேம்படுத்தவே தோன்றிய மார்க்கமாகத் திகழ்கின்றது. இஸ்லாமியர்களின் புனித வேதமான திருமறையில் இறைவன் கூறும் செய்திகளே மனிதர்களின் வாழ்வியல் மேம்பாட்டினை உயர்த்தி மறுமையென்னும் மறு உலகத்தில் சிறந்த வாழ்க்கையினை மேற்கொள்ள வழிவகுத்துக் காட்டியுள்ளது.

**சமயப் பொதுமை**

இன்றைய காலகட்டத்தில் இந்திய நாடு முழுமையும் எங்கும் எதிலும், பல சமய மக்கள் சூழ்ந்திருக்கும் பொதுவான நிலையினைக் காண்கின்றோம். அம்மக்களின் இறைவழிபாடுகள் மற்றும் பழக்க வழக்கங்கள் போன்றவை மாறுபட்டுக் காணப்படுகின்றன. ஏனெனில் அவர்களின் வழிபாடுகள் பெருந்தெய்வ வழிபாடுகள், சிறுதெய்வ வழிபாடுகள், குலதெய்வ வழிபாடுகள், இல்லறத் தெய்வம் மற்றும் நடுகல் வழிபாடுகள் போன்ற நிலைகளில் வழிபாடுகள் அமைகின்றன. ஆனால் இஸ்லாமிய மார்க்கத்தில் இறைவன் உருவமற்றவன் என்பதும் அவன் கூறும் திருமறையின் செய்திகளும் அனைத்து மக்களுக்கும் பொதுவான கருத்துக்களை வெளிக்காட்டும் விதமாகவும், அச்செயல்பாட்டினை அனைத்து மக்களும் பின்பற்றும் விதமாகவும் அமைகின்றது.

**நீதி நூல்கள்**

“சங்ககாலச் சான்றோர்களின் அனுபவ உண்மைகளையே பிற்காலப் புலவர்கள் நீதிக் கருத்துக்களாகப் போற்றினர். நீதி நூல்களில் இலக்கியச் சுவையும் கற்பனையும் குன்றித் தோன்றினும் அவை மக்கள் வாழ்வை வளப்படுத்தும் சீரிய தொண்டினைச் செய்கின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்து, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், பழமொழி, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்ற பதினொரு நூல்களும் நீதியை இயம்புவன”[3] என்கிறார் ஸ்ரீசந்திரன். இந்நூல்கள் நீதிக்கருத்துகளை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. மக்களிடையே பொதுவான நிலையில் சமய சார்புநிலையின்றி விலங்குவதால் இக்கருத்துகள் எந்த மதத்தவருக்கும் பொருந்தும் வண்ணம் விளங்குகின்றது.

### திருக்குறள்

உலகப் பொதுமறை என்னும் ஒப்பற்ற சிறப்பினை உடைய நூல் திருக்குறள். இவ்வுயரிய நூற் கருத்தைப் பிற்காலப் புலவர்கள் அனைவரும் எடுத்தாண்டுள்ளனர். "எல்லா சமயத்தாரும் ஒப்பப் போற்றுகின்ற பெருமை இந்நூலுக்கு மட்டுமே உண்டு. மேனாட்டு அறிஞர் பலர் திருக்குறளைத் தத்தம் மொழிகளில் பெயர்த்துள்ளனர்"[4] என்று தமிழ் இலக்கிய வரலாறு கூறுகின்றது.

### திருமறையும் சமயப் பொதுமையும்

உலக மக்களின் சாதி, சமய வேறுபாட்டினைக் கடந்து அனைத்து மக்களுக்கும் பொருந்தும் வண்ணம் அவர்களின் வாழ்வியல் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அமையும் நிலையினைப் பொதுமை என்பர். இதனைத் "திருமறை அகில உலகத்தாருக்கும் எல்லாக் காலத்திற்கும் ஏற்ற ஓர் நேர்வழிகாட்டியாகும். ஈமான், தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ் ஆகிய 5 முக்கிய கடமைகள் தவிர, நேர்மையான வாழ்க்கைக்கு வேண்டிய அத்தனை அம்சங்களையும் கொண்ட நன்நெறி வழிகாட்டியாக அமைந்திருக்கிறது"[5] எனக் கே.எம்.எஸ். ஷா.ஃ.பீ மொழிகிறார்.

உலகத்தார் அனைவருக்கும் இது நேர்வழிகாட்டி என்று இறைவன் தனது திருமறையில் கூறுகிறான். இதில் உள்ள அனைத்துக் கருத்துக்களும் அனைத்துச் சமய மக்களும் பின்பற்றும் வகையில் அமைந்துள்ள நீதிக் கருத்துகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. மேலும் மக்களுக்கு அறம் சார்ந்த செய்திகளை எடுத்துரைக்கின்றதன் வழி திருமறை சமயப் பொதுமையினை வெளிக்காட்டுகின்றது.

> இது (அல்லாஹ்வின்) திருவேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை பயபக்தியுடையோருக்கு (இது) நேர்வழி காட்டியாகும் (2:2).

### சமய நல்லிணக்கமும் இஸ்லாமும்

"பிற சமயங்களோடு இணைந்து இணங்கி ஒத்து உறவாட இஸ்லாம் விரும்புகிறதா? இஸ்லாத்தின் சமய நல்லிணக்கப் போக்குக்கு இடம் உண்டா? என்றும் நிலைத்து நிற்கின்ற உண்மையான கொள்கைகளைக் கொண்டுள்ள இஸ்லாம் வெற்றி பெற்றே தீரும் எனப் பலமுறை உறுதி செய்கின்ற

இஸ்லாமியத் திருமறை இஸ்லாம் பிற சமயங்களோடு இணங்கிச் செல்லும் முறைக்கு அனுமதி தருகின்றதா? இஸ்லாத்தை இவ்வுலகில் நிலைநாட்டிய இறுதித் தூதர் முகம்மது நபி (ஸல்) இஸ்லாம் பிற சமயங்களோடு இணங்கிச் செல்வதற்கு முன்மாதிரியாக வழிகாட்டியுள்ளார்களா? வாழ்க்கையின் அனைத்துத் துறைகளுக்கும் 'அழகிய முன்மாதிரி' என அவர்களை அறிமுகப்படுத்தும் இறுதித் திருமறை. அந்த அழகிய முன்மாதிரி சமய நல்லிணக்கத்திற்கு முன்மாதிரிச் செயல்களைச் செய்து வழிகாட்டியுள்ளார்களா? இப்படிப்பட்ட பல வினாக்களுக்குத் தெளிவான விடை கண்டு சமய நல்லிணக்கத்திற்கும் இஸ்லாத்திற்கும் உள்ள தொடர்பின் உண்மையான நிலையை மதிப்பிடுவதற்கு நாம் முயலவேண்டும்”[6] என்கிறார் அப்துல் கறீம்.

சமய நல்லிணக்கத்திற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கண்ட நிலைகளில் பார்க்க வேண்டுமென்று பல கருத்துக்களைப் பலதரப்பட்ட ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். அதுபோன்று ஆய்வின் மூலம் கண்டறிவது சமய நல்லிணக்க உணர்வினை மேம்படுத்த வழிவகுக்கும்.

**சமயப் பொதுமையும் சலாமும்**

“இஸ்லாமியப் பார்வையில் ஏற்றம் மிக்க இரண்டாவது செயலாக ஏந்தல் நபி குறித்தது. யாரைக் காண்கின்றபோதும் அவர் அறிந்தவரோ அறியாதவரோ அவருக்குச் சலாம் உரைப்பதாகும். இஸ்லாம் இனிது போற்றும் இச்சிறந்த செயலும் யார் எவர் எனப் பாராது. இன்னார் இனியார் என எண்ணாது அவரும் ஒரு மனிதர். அவரை வாழ்த்துவது கடமை என்ற மனிதாபிமான உணர்வோடு சலாம் உரைப்பதாகும். சலாம் என்ற அறபுச் சொல்லுக்கு அமைதி, சாந்தி, சமாதானம் என்று பொருள் உரைக்கலாம். சலாம் உரைப்பது என்பது மற்றவர்பால் தனக்குள்ள நல்லெண்ணத்தைப் புலப்படுத்துவதேயாகும். இறைவன் உங்களுக்குச் சாந்தியையும் சமாதானத்தையும் அருள்வானாக எனக் காண்பவரை வாழ்த்துவதே சலாம் உரைப்பது ஆகும்.

தன் வாழ்வில் தனக்குக் கிடைக்க வேண்டும் என ஒவ்வொருவரும் எதிர்பார்க்கின்ற நிம்மதியும் மன நிறைவும் எதிரில் காண்கின்ற ஒவ்வொரு சகோதரனுக்கும் கிடைக்க வேண்டும். இறைவன் அவனுக்கு அவற்றை அருள வேண்டும் என வாழ்த்துவதை விட உயர்ந்த வேறு ஒரு வார்த்தை ஒருவர் உரைக்க முடியுமா? ஒருவர் மற்றவருக்காக இதனைவிட உயர்ந்த ஒரு

நல்லெண்ணத்தைக் கொள்ள முடியுமா? இத்தகைய உயர்ந்த சிறந்த அழகிய நயத்தக்க நாகரிகம் மிக்க நற்செயலை ஒவ்வொரு முஸ்லிமிடமும் எதிர்பார்க்கின்ற இஸ்லாம், இந்த இனிய சொல்லைக் கற்றுத்தருகின்றது இஸ்லாம். முஸ்லிம் அல்லாத பிற சமயச் சார்புடைய மக்களிடம் நல்லெண்ணம் கொள்ளுவதும் நல்லிணக்கம் பாராட்டுவதும் இயல்பேயன்றோ? பசிக்கு உணவளிக்கும் போதும் சாந்தியும் சமாதானமும் பெற்றுச் சிறக்க வாழ்த்தும் போதும், உணவழிக்கப்படுபவரும் வாழ்த்தப்படுபவரும் தன்னுடைய சமயஞ் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்று இஸ்லாம் எண்ணுவதில்லை. எச்சமயத்தைச் சார்ந்தவராயினும் அவரும் அடிப்படை வசதிகளைப் பெற வேண்டும். சாந்தி மிக்க சமாதான வாழ்வில் திகழ வேண்டும் என எதிர்பார்க்கின்ற இஸ்லாம் சமய நல்லிணக்கப் பார்வையில் முழுமைபெற்றுச் சிறந்து நிற்கின்றது என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை"[7] என்று உரைக்கிறார் அப்துல் கறீம்.

இஸ்லாமிய மார்க்கமானது சலாம் உரைப்பதில் பிற மதத்தினர், இஸ்லாமியர் என்ற பாகுபாடு பார்க்க வேண்டியதில்லை என்கிறது. பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு கொடுப்பது எப்படி தர்மமாகுமோ அதைப்போன்று சலாம் அனைவருக்கும் சொல்வது நன்மையினைத் தரும். நாம் பசித்திருப்பவரிடம் அல்லது யாசகம் கேட்பவரிடம் சாதிகளைக் கேட்பதில்லை. அதைப்போன்றே சலாம் கூறுபவதும் பிறரிடம் நன்மை பயக்கும் செயலாக விளங்குகின்றது என்று இஸ்லாம் கூறுகின்றது.

**இஸ்லாத்தில் வேற்றுமையில் ஒற்றுமை**

இஸ்லாமிய மார்க்கம் வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட மார்க்கமாக விளங்குகின்றது. "இஸ்லாம், உலகில் அனுப்பப்பட்ட எல்லா இறைத்தூதர்களையும் உண்மைப்படுத்துகிறது. இஸ்லாத்தை நிறைவு செய்த முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றி எல்லா வேதங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்லாத்தின் ஐந்து கடமைகளாகிய,

ஈமான் - இறை நம்பிக்கை
தொழுகை - இறை வணக்கம்
நோன்பு - விரதம்

ஜக்காத் - தான தர்மம்

ஹஜ் - புனித யாத்திரை

இவையனைத்தையும் எல்லா மதங்களும் ஏற்றுக்கொள்வதுடன் இந்த ஐந்த அம்சங்களும் அனைத்து மதங்களிலும் பின்பற்றப்படுகின்றன. இது ஒன்றே எல்லா மதங்களும் இறைவனால் அருளப்பட்டது என்பதற்குச் சான்றாகும். ஆனால் இக்கொள்கைகளில் காணப்படும் சில வேறுபாடு காரணமாகப் பல மதங்களாக உருவாகிவிட்டன. இஸ்லாம் ஒன்றுதான் இந்த ஐந்து கடமைகளையும் நிறைவு செய்திருக்கிறது. இறைவன் உண்டு என்று எல்லா மதங்களும் சொல்லுகினற்ன. ஆனால் இஸ்லாம் இறைவன் ஒருவனே உண்டு என்று இயம்புகிறது.

இறைவணக்கம் செய்ய வேண்டும் என எல்லா மதங்களும் சொல்லுகின்றன. ஆனால் இஸ்லாம் ஒரு நாளைக்கு ஐந்து வேளை எந்த முறையில் தொழ வேண்டுமென வணக்கத்தை ஒழுங்குபடுத்துகிறது. விரதம் இருக்க வேண்டுமென எல்லா மதங்களும் சொல்லுகின்றன. ஆனால் இஸ்லாம் வருடத்தில் ஒரு மாதம் ரமலான் மாதம். அதிகாலை கிழக்கு வெளுத்தது முதல் மாலை சூரியன் மறையும் வரை உண்ணாமலும், பருகாமலும், தாம்பத்திய உறவு கொள்ளாமலும் இருப்பதே நோன்பு என்று பகருகிறது.

தான தர்மம் கொடுக்க வேண்டுமென எல்லா மதங்களும் சொல்லுகின்றன. ஆனால் இஸ்லாம் செல்வந்தர் யார்? இல்லாதவர் யார்? உள்ளவர், இல்லாதவருக்கு எத்தனை சதவீதம் கொடுக்க வேண்டுமென்று ஜக்ககாத்தைத் தெளிவுபடுத்தி முறைப்படுத்துகின்றது.

புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டுமென எல்லா மதங்களும் சொல்லுகின்ற. ஆனால் இஸ்லாம் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் ஹஜ் செய்ய விரும்பும் உலகத்திலுள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து இறைவன் முன்னிலையில் தன்னை அர்ப்பணிக்க வேண்டுமெனக் கூறி மனித இனம் ஒன்று என உலகத்திற்கு உணர்த்துகின்றது. எனவே பல மதங்களில் காணப்படும் வேற்றுமைகள் களையப்படுமானால், உலகில் இறைவன் அருளிய இஸ்லாமிய மார்க்கம் ஒன்றே நிலைபெறும்.

மதம் பிடித்தவன் போன்று குருட்டுத்தனமாகப் பின்பற்றும் மதமல்ல இஸ்லாம். சமயங்களில் பின்பற்றி மற்ற சமயங்களில் தன் விருப்பம்போல் நடக்க

அனுமதிக்கும் சமயமுமல்ல இஸ்லாம். இஸ்லாம் மனித வாழ்வுக்கு வழிகாட்டும் பாதையே அன்றி வேறல்ல. சிறுநீர் கழிப்பதிலிருந்து சிம்மாசனத்தில் அமரும் வரை, காலை கண் விழிப்பதிலிருந்து இரவு துயில் கொள்ளும் வரை, தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்ததிலிருந்து மண்ணறையில் புகுத்தப்படும் வரை மனிதனுடைய அனைத்துச் செயல்களுக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கு இஸ்லாம்[8] என இஸ்லாம் ஓர் அறிமுகம் என்னும் நூல் மொழிகிறது.

இஸ்லாம் மார்க்கமானது தனது மார்க்கத்தினைக் கடைபிடிக்கும் இஸ்லாமியர்கள் ஈமான் கொண்ட பின்னர் அவர் தனது வாழ்க்கையில் இறைவன் அளித்த திருமறையின் சட்டதிட்டத்தினைப் பின்பற்றி வாழவேண்டுமென வலியுறுத்துகின்றது.

**உலக மக்களும் இஸ்லாமும்**

உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் அனைவரும் உறவினரே என்பதைப் புறநானுறு

யாதும் ஊரே! யாவரும் கேளிர்![9]

என்ற வரிகளில் பகர்கின்றது. இஸ்லாமிய மார்க்கமானது உலகலாவி அனைத்து மக்களுக்கும், தாம் கூறவேண்டிய நல்லுபதேசங்களை மொழிகிறது. இக்கருத்து ஆதம் நபியான உலகத்தின் முதல் மனிதரான அவர்களைக் கொண்டே தொடர்கிறது.

இறைவன் ஒருவனே! அவனே அகிலத்தையும் அகிலத்தாரையும் படைத்தான். எனவே, அனைத்து நாடுகளும், அனைத்து மனிதர்களும் சமமே. இறைவனின் வழி காட்டுதலும் அனைவருக்கும் பொதுவானதே![10] என்றுரைக்கிறார் ஹபீப் முகம்மது.

உலகத்தில் ஆதம் நபியை (அலை) முதல் மனிதராக இறைவன் படைத்தான். அவர்களைக் கொண்டே பல கோடிக்கணக்கான மக்களை உருவாக்கினான். ஆகவே இறைவன் உலக மக்கள் அனைவரையும் ஒரு தாய் தந்தையிலிருந்து படைத்தான். மேலும் அவன் கூறும் செய்திகளும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானதாக விளங்குகின்றன.

மேலும், இறைவன் உலகத்தில் உள்ள அனைத்தையும் தாமே படைத்து அதனைக் காக்கும் பொருப்பினையும் தாம் கொண்டுள்ளதாகக் கூறுகின்றான்.

> வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியும், அகிலத்தார் அனைவரையும் பரிபாலிப்பவனுமாகிய இறைவனுக்கே எல்லாப் புகழும் (45:36)

என்னும் வசனம் உலகத்தினைப் படைத்து அதனை ஆட்சி கொள்ளும் இறைவனை, அகிலத்தார் அனைவரும் புகழ வேண்டும். அவனுக்கே எல்லாப் புகழும் உரியது என்பதை உரைக்கிறது. இறைவனே தன் அடியார்களான இறைநேசர்களை மறுமை நாளன்று சுவனம் என்னும் மறுமையில் சிறந்த இடத்தினை அளிப்பான். அங்கு என்றுமே அளியாததொரு வாழ்வினை அளிப்பான் என்பதனை இஸ்லாம் உறுதியாகக் கூறுகின்றது.

**உலகப் பொதுமையும் இஸ்லாம் சமயமும்**

இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படையே மனித நேயத்தை வளர்த்து, மனிதனிடம் மனிதன் வெறுப்பும் பகையும் பிணக்கமும் பூசலும் போரும் கொண்டு பிரிந்து போவதைத் தடுப்பதாகவே அமைந்திருக்கிறது. பகை உணர்வை மாய்த்து ஒருமைப்பாட்டு உணர்வை உயர்த்தும் ஒரு சமய நெறியாகிய இஸ்லாம் பிற சமய மக்களோடு பிணக்கமின்றி இனிய நல்ல இணக்கம் கொண்டு வாழ வழி காட்டுகிறது. வெறுப்பு, பகை, வன்முறை ஆகியவற்றிற்கு எதிரான இஸ்லாமிய மார்க்கம் சமய நல்லிணக்கத்திற்கு ஆதரவு தருகிறது.

> அவ்விருவரும் சமாதானத்தை விரும்பினால் அல்லாஹ் அவ்விருவரிடையே ஒற்றுமை ஏற்படும் படி செய்து விடுவான் (04:35)

> நீங்கள் மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள் பிரிந்து விடாதீர்கள் (42:13)

என வரும் வசனங்கள் ஒற்றுமையை வலியுறுத்துகின்றன.

மார்க்கத்தில் அனைவரும் பற்றுடன் இருந்துகொள்ளுதல் வேண்டும். ஒருவருக்கொருவர் பிரிந்துவிடாமல் இருப்பது. அவசியமானதாக இருக்கின்றது. மனிதர்களுக்கிடையில் பிரிவினை இல்லாமல் இருத்தல் வேண்டும். இது பிற சமயத்தினருக்கும் பொருத்தமாகும். ஏனெனில் பிற சமயத்தினருடனும் இஸ்லாம்

பகைமை கொள்ளுதலை வெறுக்கிறது. அவர்கள் தம் மார்க்கத்தைப் பின்பற்றாவிட்டாலும் அவர்களை மதிக்க வேண்டும். காரணமின்றி யாரையும் தண்டித்தல் கூடாது என்கிறது இஸ்லாம். இச்செயல்பாடுகள் பிற சமயங்களிலும் காணப்படுகின்றன. இருப்பினும் இஸ்லாம் மறுமை நாளினைச் சுட்டிக்காட்டி இஸ்லாமியர்களை எச்சரிக்கின்றது.

**சமய ஒருமைப்பாட்டில் இஸ்லாம்**

இஸ்லாமிய மார்க்கமானது தன் சமயத்தினருடன் மட்டும் இணக்கமுடன் இருக்க வேண்டும், மேலும் பிற சமயத்தினருடன் இணக்கம் கொள்ளல் கூடாது என்பதனைக் கூறவில்லை. இச்செயலை அடியோடு வெறுக்கிறது.

இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றும் மக்கள் நேர்வழி அடைவார்கள். ஆனால் பிற மதத்தினருடன் பழகுதலை ஒருபோதும் இம்மார்க்கம் நிராகரிக்க வில்லை. ஏனெனில் பிற சமயத்தவரும் தம்மைச் சார்ந்தவர்களே. அவர்கள் அறியாமையின் காரணமாகப் பிற மதத்தினைச் சார்ந்துள்ளார்கள். அவர்களுக்கு இறைவன் ஹிதாயத்தினைக் கொடுக்கவில்லை. ஆனால் அனைவரும் ஆதம், ஏவாள் அவர்களின் பிள்ளைகள் தாம் என்ற நிலையினை உறுதிப்படுத்துகின்றது. இதனைப்,

> பிற சமய மக்களோடு கருத்து வேறுபாடு, பகை, வெறுப்பு, மோதல் ஆகிய அனைத்தையும் தவிர்த்து இணக்கம் மிக்க இனிய நல்லுறவை வளர்ப்பதற்கு இஸ்லாமியத் திருமறை காட்டும் பல்வேறு வழிகளில் முதன்மையான ஒன்றைப் பற்றி இப்போது சிந்திக்கலாம். இஸ்லாத்தின் உயர்நிலையான முதல் கோட்பாடு ஏகத்துவமாகும். ஏகனாகிய இறைவனுக்கு இணை வைப்பதையே இஸ்லாம் தவிர்க்கிறது. யாருடைய எவ்வளவு பெரிய குற்றத்தையும் அவர் உணர்ந்து வருந்தித் திருந்திப் பாவ மன்னிப்பு கேட்கும் மனப் பக்குவத்தைப் பெற்றுவிடுவாராயின் நிச்சயமாக இறை மன்னிப்பு உண்டு என்று இஸ்லாம் இயம்புகின்றது. அத்தகைய அருளாளர்களுக்கு எல்லாம் பேரருளாளனாகத் திகழ்கின்ற இறைவனும் மன்னிக்காத மாபெரும் குற்றம் இணைவைத்தல்

என்று இஸ்லாமியத் திருமறையே எடுத்துக் காட்டுகின்றது (4:48,116)

அத்தகைய பெருங்குற்றம் புரிந்துகொண்டு இருப்பவர்களோடு முஸ்லீம்கள் எத்தகைய உறவு கொள்ள வேண்டும் என்பது பற்றி இறை மறை கூறும் கருத்துக்கள் படிப்போர் உள்ளங்களில் எல்லையற்ற வியப்பினை உருவாக்கிவிடும். இறைவனுக்கு இணையாக இறைவனுடைய படைப்பினங்களில் சிலவற்றையே இறைவனாகக் கருதி, அவை தமக்கு நன்மைகள் செய்யும் ஆற்றல் உடையவை என நம்பி அவற்றைத் தெய்வமாகக் கருதி வழிபடுதல் பொதுவாக இணைவைத்தல் என்று கூறப்படும். இறைவனால் படைக்கப்பெற்ற, அழியக் கூடிய, தமக்கென ஆற்றல் எதுவும் இல்லாத இறைவனால் படைக்கப்பெற்றவற்றையே வணங்கக் கூடிய செயலைப் புரிகின்ற இணை வைக்கின்றவர்களோடும் முஸ்லீம்கள் எத்தகைய பிணக்கமும் இன்றி அவர்களையும் வெறுக்காது ஒன்றி உறவாடி வாழ வேண்டும் என்று இறைமறை ஆணையிடுகின்றது. சமய நல்லிணக்கத்திற்கு இஸ்லாம் வழங்கும் நற்சான்றிற்கு இதைவிடச் சிறந்த ஒன்றைக் காட்ட முடியுமா?[11] என்று கூறுகிறார் அப்துல் கறீம்.

உலகலாவிய மக்கள் வேற்றுமையுடைய சமயத்தினைத் தழுவி வாழ்ந்தாலும் அவர்களை இஸ்லாமியர்கள் தம் சகோதரர்கள் போலவே கொண்டு நேசித்தல் வேண்டும் என்கிறது. மேலும் இப்பண்பினைப் பல சமயங்களும் எடுத்துரைக்கின்றது. அனைத்து உயிரினங்களிடமும் அன்பு காட்டல் வேண்டுமென்பது உலக மக்கள் யாவரும் பொது உணர்வோடு ஏற்றுக்கொள்ளும் கருத்தாகும்.

**சமய நல்லிணக்க நோக்கில் இஸ்லாம்**

இஸ்லாம் என்றாலே அது சமய நல்லிணக்கமே ஆகும். இஸ்லாமிய மார்க்கத்தில் பல்சமயத்தினருக்கும் பொருந்தும் வண்ணம் குடும்பவியல், அரசியல், அறவியல், பொருளியல், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை காணப்படுகின்றன. இவை அனைத்தும் பிற சமயங்களில் கூறப்பட்டாலும் அவை படித்து அதனை ஏற்றுக்கொண்டு தாம் கடைபிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தினைக் கொண்டவர்களுக்கு மட்டுமே பொருந்தும். சான்றாக உலகப் பொதுமறையான திருக்குறளினை ஏற்றுக் கடைபிடிப்பவர்கள் மட்டுமே அதன்வழி நடப்பர்.

மேலும், நீதி நூல்களும் அற நூல்களும் பல நற்கருத்துக்களைக் கூறினாலும் அவை சமயத்தில் வரவில்லை. இவை பொதுவாக அனைத்து மக்களுக்கும் கூறுகின்றது. ஆனால் திருமறையோ இஸ்லாம் என்ற மார்க்கத்திலும் இத்தகைய செயலினைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்கிறது. இஸ்லாமியர் தமது வாழ்க்கையில் தாம் கடைபிடிக்கும் ஒவ்வொரு நிகழ்வும் அனைத்துச் சமயத்தினரும் ஏற்றுக்கொள்ளும் விதம் அமைந்துள்ளது எனலாம். ஒரு மனிதர் தன் வாழ்வியல் பொக்கிஷமாகக் கருதி எதையும் படிப்பானாயின் அதன்வழி நடப்பது அரிது. ஆனால் திருமறை இஸ்லாமிய மக்களுக்கு ஓர் வாழ்வியல் பொக்கிஷமாக விளங்குகின்றது. இதன்மூலம் இஸ்லாமியர்கள் தம் வாழ்வினை மேற்கொள்கின்றனர். இவ்வாழ்வின் நிகழ்வாகப் பிற சமயத்தினருக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை. மாறாகப் பிற சமயத்தினரும் ஏற்றுக்கொள்ளும் விதம் அமைந்திருப்பதே திருமறையின் கருத்துகளாகும். இக்கருத்து அனைத்து உலகத்தாருக்கும் பொதுவானதாக விளங்குவதால் திருமறை பல சமயத்தினர் அனைவருக்கும் பொருந்தும் வண்ணம் உள்ளதால் இதில் சமயப் பொதுக் கருத்துக்கள் நிரம்ப உள்ளது என்று கூறலாம். பிறருடைய பொருளினை அபகரித்துக் கொள்ளுதல் பாவமாகும். இதனைப் பிற சமயமும் தவறு என்று கூறுகின்றது. மேலும் அற நூல்களும் இதனை வழிநடத்தியே செல்கின்றது. ஆனாலும் இஸ்லாமிய மார்க்கச் சட்டத்தில் இறைவனே தனது திருமறையில்,

> அமானிதத்தை அதன் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்து விடவேண்டும் என அல்லாஹ் கட்டளையிடுகிறான் (4:58)

எனக் கூறுகிறான். அமானிதப் பொருளை அபகரித்துக் கொள்ளுதல் சட்டப்படி குற்றமாகும். ஏனெனில் அப்பொருளைக் கொடுத்தவனின் மனதானது மிகவும் துயரப்படும். பிறர் பொருளினைத் திருடுதல் குற்றமாகும். இதற்குத் தண்டனையாக இறைவன்,

> திருடனையும், திருடியையும் கையை வெட்ட வேண்டும் (5:38)

எனக் கூறுகிறான். திருடியவர்களின் கையினை வெட்டுவதால் அதனைக் காணும் ஒவ்வொருவரும் அத்தவறினைச் செய்ய எண்ணமாட்டார்கள். ஆகையால் இதுபோன்ற தண்டனை தருவதை இஸ்லாம் அனுமதிக்கிறது.

இஸ்லாத்தில் அனைவரும் சமமே. இதில் ஈமான் என்ற கலிமாவை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரும் ஏக இறைவன் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டவர்கள் ஆவார்கள். இறைவன் உருவமற்றவன் என்ற எண்ணத்தினைக் கொண்டு உலகலாவிய பல இடங்களில் மக்கள் இருப்பினும் அவர்களின் வாழ்வியல் நோக்கு இஸ்லாமிய மார்க்கமும் அதனைத் தந்த இறைவன் முகம்மது நபி (ஸல்) அவர்களின் மூலம் அருளிய திருமறையும், நபி (ஸல்) அவர்கள் சொல்லும் செயலும் சேர்ந்த வாழ்வினையே தமது வாழ்க்கையில கடைபிடிக்க வேண்டும். மேலும், இஸ்லாமிய சமயத்தில் இறைவன் கூறும் திருமறையின் செய்திகள் யாவும் உலகளாவிய மாற்று மதத்தினருக்கும் அவர்களின் வாழ்வியலுக்குப் பொருந்தும் வண்ணம் அமைவதால் இஸ்லாம் மார்க்கம் ஒரு சமயப் பொதுமையான மார்க்கமாக விளங்குகின்றது.

## முடிவுகள்

- இஸ்லாம் ஒரு மதமன்று; மார்க்கமாகும். மார்க்கம் என்ற சொல்லுக்கு வழி, நெறி எனும் பொருள்கள் மொழியப்படுகின்றன.

- இஸ்லாமிய மார்க்கத்தில் இறைவன் உருவமற்றவன் ஆவான். இஃது உலக மக்களுக்குப் பொதுவான கருத்து என்ற அடிப்படையில் சமயப் பொதுமையாக விளங்குகிறது.

- உலக மொழிகளில் தோன்றிய இலக்கியங்கள் கூறும் நீதிக் கருத்துகள் உலக மக்களுக்குப் பொதுமையாவது போலத் திருக்குர்ஆனிலும் பொதுமைக் கருத்துகள் நிறைந்துள்ளன.

- சலாம் என்ற அரபுச் சொல்லுக்கு அமைதி, சாந்தி, சமாதானம் என்று பொருளுரைப்பர். சலாம் இஸ்லாம் போற்றும் சிறந்த செயல்முறையாகும். தன் முன் நிற்கும் மனிதர் அறிந்தவர் அறியாதவர் என்றென்னாது, அவரும் ஒரு மனிதர் என்ற அடிப்படையில் அவரை வாழ்த்துவது கடமையாகும். சலாம் ஒரு சமயப் பொதுமையாக விளங்குகிறது.

- இஸ்லாம் கூறும் ஐந்து கடமைகளாகிய இறை நம்பிக்கை, இறைவணக்கம், விரதம், தான தர்மம், புனித யாத்திரை இவற்றை எல்லா இஸ்லாமிய மக்களும் பின்பற்றுகின்றனர்.

* இஸ்லாம் மார்க்கம் மனித நேயத்தை வளர்க்கிறது. மனிதர்களிடம் விரும்பும் பகையும் போரும் பூசலும் ஏற்பட்டு மனித இனம் பிரிவதைத் தடுக்கிறது.

* இஸ்லாம் மார்க்கம் இஸ்லாமியர்களைப் பிறமதத்தினருடன் பழகுதலை ஒரு போதும் நிராகரிக்கவில்லை. ஏனெனில், பிற சமயத்தவரும் தம்மை சார்ந்தவர்களே ஆவர். அஃதாவது அனைவரும் ஆதாம், ஏவாள் பிள்ளைகள் தாம் என்ற நிலையினைத் திருக்குர்ஆன் உறுதிப்படுத்துகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. உ. அலிபாவா, தமிழில் இஸ்லாமியச் சதக இலக்கியங்கள், ப.110.
2. மேலது., ப.111.
3. ஜெ. ஸ்ரீசந்திரன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.94.
4. மேலது., ப.95.
5. எம்.எம். அப்துல் காதிர் உமரி, திருக்குர்ஆன் பொருள் அட்டவனை, ப.15.
6. மு. அப்துல் கறீம், இஸ்லாமும் சமய நல்லிணக்கமும், ப.6.
7. மேலது., ப.17.
8. இஸ்லாம் ஓர் அறிமுகம் (மூன்றாம் பகுதி), ப.19.
9. இரா. இளங்குமரன் (உ.ஆ.), புறநானூறு, பா.192.
10. கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் (தொ.ஆ.), வேத வரிகளும் தூதர் மொழிகளும், ப.137.
11. மு. அப்துல் கறீம், இஸ்லாமும் சமய நல்லிணக்கமும், ப.95.